OS 12/2018

வா.சா.1 பாலாஜி த/பெ வெங்கடேசன்

நாள் 13.03.2026

**குறுக்கு விசாரணை**

1. 1ம் வாதி வெங்கடேசன் என் தகப்பனார். 1ம் வாதி வெங்கடேசன் சுத்தமாக காது கேட்காது நிதானம் குறைவாக உள்ளது சைகை காண்பித்தால் புரிந்து கொள்வார். 1ம் வாதி நம்மைப்போல் சராசரியான நபர் இல்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த விவரம் 1ம் வாதிக்கு தெரியாது என்றால் நான் சொல்லியிருக்கிறேன். 1ம் வாதி நிதானம் குறைவானவர் என்று கூறி நீதிமன்றத்தில் உத்தரவு வாங்கி இந்த வழக்கை தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. 1ம் வாதிக்கு எங்கு சிகிச்சை அளிக்கப்படுகிறது என்றால் அவருக்கு சிகிச்சை எதுவும் அளிக்கப்படவில்லை. 1ம் வாதி வேறு ஒரு பெண்ணுடன் தனியாக குடும்பம் நடத்தி வருகிறார் என்றால் சரிதான். என்னுடனும் என் தாயாருடனும் 1ம் வாதி பேச்சு வார்த்தை இல்லை என்றால் சரிதான். என் அப்பாவுடன் உடன் பிறந்தவர்கள் குமார், ஏழுமலை, பூங்காவனம், சாந்தி, ராணி ஆகியோர் ஆவார்கள். இந்த வழக்கை 3 சமபாகமாக பிரிக்க தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். வழக்கு சொத்துகளை பொறுத்து எனது தந்தையுடன் பிறந்த பூங்காவனம், சாந்தி, ராணி மற்றும் 1ம் வாதியின் தாயார் காசியம்மாளுக்கும் பாகம் உள்ளது என்றால் சரிதான்.

2. 09.11.2016 தேதியில் ஒரு அக்கு விடுதலை பாகப்பிரிவினை பத்திரம் பதிவு செய்யப்பட்டதா என்றால் சரிதான். 1ம் வாதி பாக விடுதலை பத்திரத்தின் மூலம் கிடைத்த சொத்துகளை தனியாக அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். பாக விடுதலை பத்திரத்தில் காசியம்மாள், ஏழுமலை, வெங்கடேசன், பூங்காவனம், சாந்தி, ராணி, குமார் ஆகியோர் சேர்ந்து எழுதி கொண்ட ஆவணம் என்றால் சரிதான். அந்த பாக விடுதலை பத்திரத்தின் அடிப்படையில் எனது தகப்பனாருக்கும் 1ம் பிரதிவாதி குமாருக்கும் தனித்தனி பட்டா ஏற்பட்டுள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்துகள் அனைத்தும் எனது தாத்தா மணி கவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். நானும் எனது தாயாரும் எனது தம்பியும் எனது தகப்பனாரை எங்களுடன் சேர்ந்து வாழும் படியும் சொத்தை கொடுக்கும் படியும் கேட்டேனா என்றால் சரிதான். 7ம் பிரதிவாதி மற்றும் எனது தகப்பனாரை பழி வாங்க வேண்டி எனது தகப்பனாரின் அனுமதி இல்லாமல் இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. பாகம் பிரித்து கொண்ட சொத்தை தான் குமாரின் பாகத்தை 7ம் பிரதிவாதி கிரையம் வாங்கி இருக்கிறார் என்றால் பாகப்பிரிவினை நடக்கவில்லை.

3. உரிய ஆவணங்களின் அடிப்படையில் குமார் என்பவரிடம் இருந்து 7ம் பிரதிவாதி இளைய குமார் கிரையம் வாங்கியது சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல. ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்ட சொத்து குறித்து 7ம்பிரதிவாதி பழி வாங்க வேண்டி இந்த வழக்கை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால் சரியல்ல. எனது தகப்பனார் பெயரை நாங்களாகவே சேர்த்து வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும் எனது தகப்பனாருக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்றாலும் சரியல்ல. ஏற்கனவே பாகம்பிரிக்கப்பட்ட சொத்து மீது தாக்கல் செய்துள்ள இந்த பாக வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.